இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 66 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 30 – வியாழக்கிழமை 16 அக்டோபர் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 66: Thiruvalluvar Year - 2056 - Purataasi 30 - Thursday 16 October 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்’

# குடும்பத்தில் பெண்களின் மதிப்பை வலுப்படுத்துகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் அளித்த மாநில திட்டக்குழு ஆய்வறிக்கையில் தகவல்!

**சென்னை, அக். 16 –**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (14.10.2025) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளான “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் தாக்க மதிப்பீடு”, “நான் முதல்வன் திட்டத்தின் மதிப்பீட்டாய்வு”, “தமிழ்நாட்டில் புத்தொழில் துவக்கத்திற்கான சுற்றுச்சூழல் அமைப்பு: வாய்ப்புகள் மற்றும் சவால்கள்”, “தமிழ்நாடு கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டுவசதிக் கொள்கை மற்றும் “தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகரிய மேம்பாட்டுக் கொள்கை” ஆகியவற்றை துணை முதலமைச்சரும் மாநில திட்டக் குழுவின் அலுவல் சார் துணைத் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் மற்றும் மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் ஆகியோர் சமர்ப்பித்தனர்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (14.10.2025) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளை துணை முதலமைச்சரும் மாநில திட்டக் குழுவின் அலுவல் சார் துணைத் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் மற்றும் மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் ஆகியோர் சமர்ப்பித்தனர். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளிட்ட அரசு உயரதிகாரிகள் உள்ளனர்.

மாநில திட்ட குழுவானது முதலமைச்சர் அவர்கள் தலைமையில் செயல்படும் ஓர் உயர்மட்ட ஆலோசனைக் குழுவாகும். தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப் பட்டு வரும் முன்னோடி மக்கள் நலத் திட்டங்களை மதிப்பீட்டு ஆய்வு செய்தல் மற்றும் அரசு ஆளுகையில் எழும் புதிய தேவைகளுக்கேற்ப கொள்கை முடிவுகளை எடுப்பதிலும், பல்வேறு ஆய்வுகள் நடத்தி அறிக்கை தயாரிப்பதிலும் தனது பங்களிப்பை மாநில திட்டக் குழு நல்கி வருகிறது. முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்த அறிக்கைகளின் முக்கிய அம்சங்களாவன:

**1. கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் தாக்க மதிப்பீடு**

தமிழ்நாடு மாநில திட்டக் குழு, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் தாக்க மதிப்பீட்டு ஆய்வினை மேற்கொண்டது. பயனாளிகள் மற்றும் அவர்களின் குடும்ப வாழ்வில் இத்திட்டம் ஏற்படுத்திய தாக்கத்தை கண்டறிவது இவ்வாய்வின் நோக்கமாகும். கிராம மற்றும் நகர்ப்புறத்தில் வாழும் 10,311க்கும் மேற்பட்ட குடும்பங்களை ஆய்வு செய்ததில், இத்திட்டத்தின் செயல்பாடு, சமூகத்தில் மிகவும் பின்தங்கிய பிரிவினரை சென்றடைந்துள்ளதை இவ்வாய்வானது கண்டறிந்துள்ளது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் (KMUT) மூலம் வழங்கப்படும் தொகையினை பயனாளிகள் பெரும்பாலும் மருத்துவச் செலவுகள் மற்றும் குழந்தைகளின் கல்விக்காக பயன்படுத்துகின்றனர், அதில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதி தரமான உணவுப் பொருட்களை வாங்கும் நுகர்வு செலவுக்காக பயன்படுத்துகின்றனர் என கண்டறியப்பட்டது. இதன் மூலம் குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பிலும், ஊட்டச்சத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தத் திட்டம் பெண்களின் மேம்பாட்டிற்கான காரணியாக செயல்பட்டு, அவர்களின் தன்னம்பிக்கையை உயர்த்தி, குடும்பத்தில் பெண்களின் மதிப்பை வலுப்படுத்துகிறது. இத்திட்டத்தின் மூலம் பெறும் தொகையை பெண்கள், தாமாகவே முடிவெடுத்து தங்களது குடும்பச் செலவுகளுக்காக பயன்படுத்துகின்றனர். பயனாளிகளில் கணிச மானோர், அவர்தம் குடும்பங்களின் பொருளாதார முடிவுகளில் தங்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

**2. “நான் முதல்வன்” திட்டத்தின் மதிப்பீட்டாய்வு**

“நான் முதல்வன்” திட்டமானது தமிழ்நாடு அரசின், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் ஒரு முன்னோடி திட்டமாகும். மாணவர்களுக்கு தொழில் சார்ந்த திறன்களை கற்பித்து வேலை வாய்ப்பு பெற்றிடவும், கல்வி கற்றல் மற்றும் தொழில் துறைகளின் தேவைகளுக்கிடையேவுள்ள இடைவெளியை குறைப்பதையும் நோக்கங்களாகக் கொண்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

மாநில திட்டக் குழுவால், “நான் முதல்வன்” திட்டம் செயல்படுத்தப்படும் பொறியியல் மற்றும் பலவகை தொழில் நுட்ப கல்லூரிகளில் (Polytechnic Colleges) பயிலும் மாணவர்களிடம் இத்திட்டத்தின் மதிப்பீட்டாய்வு டிசம்பர் 2024 முதல் மே 2025 வரை மேற்கொள்ளப்பட்டது. 52 பொறியியல் கல்லூரிகள் மற்றும் 72 பாலிடெக்னிக் கல்லூரிகளில் சுமார் 9000 மாணவ மாணவிகளிடம் இத்திட்டம் குறித்து கேட்டறியப்பட்டது. தொழில் நிறுவனங்களின் தேவைகள் மற்றும் வேலைவாய்ப்பிற்கான தொழில் நுட்ப திறன்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விரிவாக மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட ஆய்வில், 75 சதவிகிதத்திற்கும் அதிகமான மாணவர்கள் வேலை வாய்ப்புக்குத் தேவையான நடைமுறை, சுய விவரங்கள் தயாரிப்பு மற்றும் தொழில் சார்ந்த திறன்களை பெற்றுள்ளதால், தொழில் நிறுவனங்களின் வேலை வாய்ப்பு தேர்வுகளை, நம்பிக்கையுடன் எதிர்கொள்ள தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளனர். கிராமப்புற மற்றும் முதல் தலைமுறை மாணவ, மாணவியர்களுக்கு அளிக்கப்பட்ட சமமான தொழில் சார்ந்த திறன் பயிற்சிகளால் வேலை வாய்ப்பு திறன் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வாய்வு வேலை வாய்ப்பளிக்கும்தொழில்துறைநிறுவனங்களின் கண்ணோட்டத்தினையும் ஆய்வுக்கு உட்படுத்தியது. அதன்படி கல்லூரி முடித்து துவக்க நிலையில் பணியில் சேரும் மாணவர்களின் தொழில் கற்றல் திறன் “நான் முதல்வன்” திட்டத்தின் காரணமாக மேம்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

தொலைதூர பகுதிகளில் உள்ள கிராமப்புற மாணவர்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்து சிரமங்களை களையும் வகையில் உள்ளூர் கல்வி நிறுவனங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் ஊரக பகுதியில் உள்ள பயிற்றுனர்களின் திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றின் தேவையினை இவ்வறிக்கை வலியுறுத்துகிறது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## ஓர் அரசியல்வாதியாக அல்ல, அடிப்படையில்

# மனிதராக இருப்பதற்கே தகுதியற்றவர் சி.வி.சண்முகம்!

## அமைச்சர் கீதாஜீவன் கடும் கண்டனம்!

**சென்னை, அக். 16 –**

**“ஓர் அரசியல்வாதியாக அல்ல, அடிப்படையில் ஒரு மனிதராக இருப்பதற்கே தகுதியற்றவர் சி.வி.சண்முகம்” என்று அமைச்சர் கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அமைச்சர் கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அரசின் இலவசத் திட்டங்களோடு பெண்களையும் ஒப்பிட்டு, அருவருக்கத்தக்கக் கருத்தை வெளியிட்டிருக்கிறார் அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம். அ.தி.மு.க. பூத் கமிட்டி பயிற்சிக் கூட்டத்தில் பேசிய அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரும் மாநிலங்களவை உறுப்பினருமான சி.வி.சண்முகம், ”தேர்தலுக்குப் பல அறிவிப்புகள் வரும். இலவசமாக மிக்ஸி, கிரைண்டர், ஆடு, மாடு, ஏன் ஆளுக்கு ஒரு மனைவியையும் கூட இலவசமாக வழங்குவார்கள்” என மிகக் கீழ்த்தரமாக விமர்சித்திருக்கிறார்.

திராவிட மாடல் அரசு மக்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. குறிப்பாக மகளிர் முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சொந்தக் காலில் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள மகளிர் விடியல் பயணம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம், புதுமைப் பெண் திட்டம், பணிபுரியும் மகளிர்க்கு தோழி விடுதிகள் திட்டம், சுய உதவி குழு மகளிருக்கு கடன் வரம்பை அதிகரிக்கும் திட்டம், மகளிரை தொழில் முனைவோர் ஆக்கும் திட்டம் போன்ற



திட்டங்களை செயல்படுத்தி, பெண்களின் பொருளாதாரத்தை உயர்த்தி வருகிறது.

“பொண்டாட்டிகளையும் இலவசமாகத் தருவார்கள்” எனப் பெண்களை இலவசத்தோடு ஒப்பிட்டுக் கொச்சைப்படுத்தியிருக்கிறார் சி.வி. சண்முகம். அ.தி.மு.க.வுக்குப் பெண்கள் மீது இருக்கும் வக்கிரமும் வன்மமும் வெளிப்பட்டிருக்கிறது. ஓர் அரசியல்வாதியாக அல்ல. அடிப்படையில் ஒரு மனிதராகவே இருப்பதற்குக் கூட தகுதியற்றவர் சி.வி.சண்முகம்.

**எடப்பாடி கண்டிக்காதது ஏன்?**

ஜெயலலிதா இருக்கும் போது சி.வி.சண்முகம் இப்படிப் பேசியிருக்க முடியுமா? அவரை இருக்கும் இடம் தெரியாமல் அரசியலில் இருந்தே அப்புறப்படுத்தியிருப்பார் ஜெயலலிதா. ஆளுமை இல்லாத எடப்பாடி பழனிசாமி ஒரு கண்டிப்பைக்கூடச் செய்யவில்லை. பழனிசாமி வீட்டிலும் பெண்கள் இருக்கத்தானே செய்வார்கள். அவர்களுக்கும் சேர்த்துத்தானே சேற்றை வாரி வீசியிருக்கிறார் சி.வி. சண்முகம். அந்த சொரணைகூட பழனிசாமிக்கு இருக்காதா? ஒருவர் அடிமையாய் மாறிவிட்டால், அவரிடம் ஆளுமையும் சூடு சொரணையும் எப்படி இருக்கும்? உங்கள் வீட்டுப் பெண்கள் எல்லாம் உங்களைப் பார்த்து என்ன நினைப்பார்கள்?

பெண்கள் பயணம் செய்யும் மகளிர் விடியல் பயணப் பேருந்துகளை லிப்ஸ்டிக் பூசிய பேருந்துகள் எனக் கேவலமாகப் பேசியவர்தானே எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி. அவரின் அடிவருடி சி.வி.சண்முகத்தின் நாக்கில் நாராசம் தானே வரும்.

தமிழ்நாடு அரசு பெண்களுக்கு வழங்கும் தொகையைப் பிச்சை போடுவதாகச் சொல்லி கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறும் பெண்களை நடிகை குஷ்பு கொஞ்ச நாட்கள் முன்பு இழிவுபடுத்தினார். பா.ம.க.வின் சவுமியா அன்புமணி, “உங்க 1000 ரூபாய் யாருக்கு வேணும்?” எனக் கேவலமாகப் பேசினார். ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனோ அரசு வழங்கும் நிவாரணத் தொகையைக் கேலி செய்தார். “வெள்ளம் வந்தால், வீடு இடிந்து விழுந்தால் 500, 1000 எனத் தருகிறார்கள். இத்தகைய நடவடிக்கையால் நாடு முன்னேறாது. எப்போது பார்த்தாலும் இன்னொருவர் போடும் பிச்சையில் நாம் வாழத் தேவையில்லை” என்று சொன்னார். இவர்களின் குணமும் நிறமும் ஒன்றுதான். இவர்கள் ஒன்றாகக் கூட்டணி சேர்ந்து தி.மு.க.வை எதிர்க்கவில்லை. ஒட்டுமொத்தப் பெண்களையே அழிக்கக் கைகோர்த்திருக்கிறார்கள்.

**பெண்களுக்கு முதல்வரின் மகத்தான திடடங்கள்!**

முதலமைச்சர் பெண்களுக்காகப் பார்த்துப் பார்த்து செயல்படுத்திவரும் மகத்தான திட்டங்களால் பெண்களிடம் அசைக்க முடியாத செல்வாக்கைப் பெற்றிருக்கிறார். அது அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் அடிவயிற்றைப் பிசைந்துக் கொண்டிருக்கிறது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்